# கிழக்குப் பல்கலைக்கழகம்

## முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - I
## (நாடகமும் அரங்கியலும்) - 2004-2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)

## DTAS 2105 தென்னாசிய நடனக்கலை ஓர் அறிமுகம்

நேரம் : 03 மணித்தியாலம்

முதலாம் பகுதியிலிருந்து எல்லா வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும், மூன்றாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி -1

01.
1. இலங்கையின் சாஸ்திரிய நடனமான கண்டிய நடனத்தில் உள்ள ஐந்து வகையினையும் குறிப்பிடுக.
2. கதகளியில் அபிநயத்தை எவ்வாறு வெளிப்படுத்துவர்?
3. கேரள சம்பிரதாயத்தில் புறப்பாடு என்றால் என்ன?
4. துள்ளலில் எத்தனை வகையுண்டு? அதனைத் தோற்றுவித்தவர் யார்?
5. யக்ஷகானம் என்றால் என்ன?
6. 'கட்டைக் கூத்து'என்று தெருக்கூத்தை அழைப்பதன் காரணம் என்ன?
7. தெருக்கூத்தின் கதாபாத்திரத்திரங்கள் சிலவற்றையும், அவற்றிற்கு போடப்படும் ஒப்பனை நிறங்கள் சிலவற்றையும் குறிப்பிடுக?
8. புகழ்பெற்ற மோகினியாட்டக் கலைஞரைக் குறிப்பிடுக?
9. தென்னாசிய நடனங்களையும் அது ஆடப்படும் பிரதேசங்கள், நாடுகள் சிலவற்றையும் குறிப்பிடுக?
10. யக்ஷகானம் ஆடப்படும் அரங்கை சுருக்கமாகத் தருக

(புள்ளிகள் 30)

### பகுதி-11

02) தென்னாசிய நடனங்கள் என நீர் கருதுபவை யாவை? அவற்றின் பொது அம்சங்களை விளக்குக?

03) 'கதகளி ஓர் நுட்பமான கலையாகும்' என்பதற்கு நீர் காட்டும் காரணங்களை விளக்கமாகத் தருக?

(புள்ளிகள் 30)

### பகுதி-111

04) ஓட்டம் துள்ளல் எனப்படும் கேரளா நாட்டிற்குரிய நாட்டிய நாடகம் பற்றி விளக்கி அது எவ்வாறு தோற்றம் பெற்றது , வளர்ச்சியடைந்தது என்பதனை விபரிக்குக.

05) ஈழத்து நடனமான வடமோடி, தென்மோடிக் கூத்துப் பற்றி சுருக்கமாகத் தந்து அதன் ஆடல், பாடல் , ஆஹார்யம் என்பனவற்றை விளக்குக?

06) ஈழத்தில் கூத்துக் கலையின் இன்றைய நிலையினைக் கூறி அதனை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதனையும் விளக்குக?

(புள்ளிகள் 50)

*********